# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) செங்கல்பட்டு மண்டலம் அவர்களின்
நடவடிக்கைகள்.
முன்னிலை திரு.S.தனராச பி.இ.

ந.க.எண்.2261/2012/செம3 நாள். 06.09.2012

பொருள்: குடியிருப்பு கட்டிடம் - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் செங்கல்பட்டு மண்டலம் செங்கல்பட்டு - திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம் திருவள்ளூர் நகராட்சி, பெரியகுப்பம் கிராமம் சர்வே எண்கள்.608/1-ல் அமையும் ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவு CSAR/DTCP –M- 82-44 /LP 26 -ல் மனை எண்.112, 113 -யை ஒருங்கிணைத்து 594.79 ச.மீ மனையிடத்தில் 1054.51 சமீ கட்டிடப் பரப்பில் ஸ்டில்ட் + 4 தளங்களில் உத்தேச 18 குடியிருப்புகள் கொண்ட கட்டுமானத்திற்கு தொழில் நுட்ப அனுமதி வழங்குதல்- குறித்து

பார்வை:
1. ஆணையர், திருவள்ளூர் நகராட்சி அவர்களின் கடிதம் ந.க.எண்.1801/12 எப் நாள். 11.5.12
2. அரசாணை எண்.86, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை. நாள்.23.03.2012
3. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்.28.08.2012(அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு கட்டணம், நன்னிலைக் கட்டணம் ஆகியவை செலுத்தக் கோரியது)
4. மனுதாரர் P.L.S. நாகப்பன் மற்றும் திருமதி.N.விசாலாட்சி ஆகியோர்களின் கடிதம் நாள்.03.09.12 (அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு கட்டணம், நன்னிலைவரி கட்டணம் ஆகியவை செலுத்தியது)

*************

<u>உத்தரவு</u>

பார்வை 1-ல் சுட்டிய கடிதம் மூலம் பெறப்பட்ட இப்பொருள் சம்மந்தமான இணைப்புகள் பரிசீலிக்கப்பட்டு, திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், திருவள்ளூர் நகராட்சி, பெரியகுப்பம் கிராமம் சர்வே எண்கள்.608/1-ல் அமையும் ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவு CSAR/DTCP –M- 82-44 /LP 26 -ல் மனை எண்.112, 113 -யை ஒருங்கிணைத்து 594.79 ச.மீ கொண்ட மனையிடத்திற்கு "ABCDE" என எல்லையிட்டு **மவ/நஊதுஇ(செம)எண்.103/2012** என எண்ணிடப்பட்டு மனை ஒருங்கிணைப்பும் அம்மனையில் 1054.51 சமீ கட்டிடப் பரப்பில் Stilt + 4 தளங்கள் கொண்ட 18 குடியிருப்புகள் கொண்ட வரைபடத்திற்கு **கவ/நஊதுஇ(செம) எண்.56/2012** என எண்ணிடப்பட்டு பின்வரும் நிபந்தனைகளுடன் தொழில் நுட்ப இசைவு அளிக்கப்படுகிறது.

பார்வை 3-ல் கண்டுள்ள இவ்வலுவலக கடிதத்தில் கோரப்பட்ட உட்கட்டமைப்பு கட்டணத் தொகை **ரூ.3,97,500/-** முழுவதும் பார்வை 4-ல் கண்ட மனுதாரர் கடிதம் மூலம் பெறப்பட்டுள்ளது.

<u>நிபந்தனைகள்</u>

1. உத்தேச 18 குடியிருப்புகள் உபயோக கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்படவேண்டும்.
3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.

4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும் உபயோகிப்பாளருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி மற்றும் இதர தேவைக்கான தண்ணீர் வசதி ஆகியவற்றை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தரவேண்டும்.
7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்படவேண்டும்.
8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீத்தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்படவேண்டும்.
9. அரசாணை எண்.341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள்.03.11.2004-ன்படி செப்டிக் டேங்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.
10. சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash Bricks and Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

முத்திரையிடப்பட்ட வரைபடங்கள் இரண்டு மற்றும் உத்தரவு கடிதம் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

ஆணையர், திருவள்ளூர் நகராட்சி அவர்கள் இறுதி உத்திரவினை விண்ணப்பதாரருக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மேலும் ஒப்புதல் பெறப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகைச் சான்றினை அனுப்புமாறு ஆணையர், திருவள்ளூர் நாகராட்சி அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6/9/12

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ)
செங்கல்பட்டு

6/9/12 6/9/2012

இணைப்பு
வரைபடங்கள் - 2

பெறுநர்
ஆணையர்,
திருவள்ளூர் நகராட்சி
திருவள்ளூர்

நகல்
P.L.S. நாகப்பன் மற்றும் திருமதி.N.விசாலாட்சி
ப.எண்.62, பு.எண்.30
பீமண்ணமுதலி இரண்டாவது தெரு,
ஆழ்வார்பேட்டை, சென்னை-18

திருவள்ளூர் நகராட்சி ஆணையர் அவர்களின் செயல் முறைகள்
முன்னிலை : திரு.கே.சரவணக்குமார்,பி.பி.ஏ., பிஎல்.

ந.க. எண்.1801/2012/எப்1

நாள் 01.11.2012

பொருள் : கட்டிடம் – திருவள்ளூர் நகராட்சி – பெரியகுப்பம் கிராமம் – நில அளவு எண். 608/1ல் அமையும் ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவு எண்.CSAR/DTCP –M-82–44/LP26ல் மனை எண்.112,113யை ஒருங்கிணைத்து 594.79 ச.மீ மனையிடத்தில் 1054.51 சமீ கட்டிடப் பரப்பில் ஸ்டில்ட் +4 தளங்களில் உத்தேச 18 குடியிருப்பு கட்டிடம் கட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் செங்கல்பட்டு தொழில்நுட்ப இசைவு அளித்தது – இறுதி உத்திரவு வழங்குதல் – சம்மதமாக.

பார்வை : 1. மனுதாரர் திரு.PL.S.நாகப்பன் மற்றும் N.விசாலாட்சி என்பவரின் விண்ணப்பம் நாள்.03.05.2012.

2. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) செங்கல்பட்டு அவர்களின் உத்திரவு கடித ந.க.எண்.2261/2012/செம3 நாள். 06.09.2012.

**உத்தரவு:**

பார்வை 1ல் கண்டுள்ள விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு பார்வை 2ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) செங்கல்பட்டு அவர்களின் கடிதத்தில் பெரியகுப்பம் கிராமம் நில அளவு எண்.608/1ல் அமையும் ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவு எண்.CSAR/DTCP –M-82–44/LP26ல் மனை எண்.112,113யை ஒருங்கிணைத்து 594.79 ச.மீ மனையிடத்திற்கு "ABCDE" என எல்லையிட்டு மவ/நஊதுஇ(செம) எண்.103/2012 என எண்ணிடப்பட்டு மனை ஒருங்கிணைப்பும், அம்மனையில் 1054.51 ச.மீ கட்டிடப் பரப்பில் Stilt + 4 தளங்கள் கொண்ட 18 குடியிருப்புகள் கொண்ட வரைபடத்திற்கு கவ/நஊதுஇ (செம)எண்.56/2012 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப இசைவு அளிக்கப்பட்டது.

எனவே நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் செங்கல்பட்டு அவர்களின் கடித்தில் தெரிவித்துள்ளவாரு இடத்தை அங்கீகரித்து வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு புதிய கட்டிடம் கட்டிக்கொள்ள கீழ் கண்ட நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின் ஒரு தொகுப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

கட்டிடம் கட்ட குறித்த இடத்தில் கட்டிடத்தில் கட்டிடத்தை வரைபடத்தில் வரைந்துள்ளபடி கீழ்க்கண்ட கட்டுப்பாடுகளுக்கு 01.11.2012 முதல் 31.10.2015 தேதிக்குள் கட்டிக் கொள்ள உரிமையாணை அளிக்கப்படுகிறது.

1/11/12

ஆணையர்
திருவள்ளூர் நகராட்சி

1/11/12

**நிபந்தனைகள்:**

1. உத்தேச கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 11.10.2002ன் படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிபாளருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி மற்றும் இதர தேவைக்கான தண்ணீர் வசதி ஆகியவற்றை மனுதார தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
7. மனையில் அமையும் குடிநீர் மேல் நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
8. உதேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீத்தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9. அரசாணை எண். 341 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(ந.நி1) துறை நாள். 3.11.2004 ன் படி செப்டிக் டேங்கிர் " U" Trap அமைத்தல் வேண்டும்.
10. சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின் உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash Bricks மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் ( உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
12. கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட தேதி அல்லது கட்டிடம் பயன்படுத்துகிற தேதி ஆகியவற்றில் எது முன்கூட்டி நடந்ததோ அந்த தேதியை கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட அல்லது கட்டிடம் பயன்படுத்தப்பட்ட தேதியிலிருந்து 15 தினங்களுக்குள் முடிக்கப்பட்ட இரண்டு வரைபடங்களுடன் நிர்வாக அதிகாரிக்கு தெரிவிக் வேண்டும்.
13. தவறான ஆவணங்கள் சமாப்பிக்கப்பட்டிருப்பின் தங்கள் கட்டிட அனுமதி முன் அறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

மேற்படி நிபந்தகைளுக்கு மாறாக செயல்பட்டால் மனுதாரரின் கட்டிட அனுமதி உரிமம் ரத்தாவதோடு கட்டப்பட்ட கட்டிடம் இடித்து அப்புறப்படுத்தப்படும்.

1/11/12

ஆணையர்
திருவள்ளூர் நகராட்சி.

பெறுநர்.
திரு.PL.S.நாகப்பன் மற்றும் N.விசாலாட்சி.
62/30, பீமண்ண முதலி 2 வது தெரு,
ஆழ்வார்பேட்டை, சென்னை.



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate